**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 125/2019 P.W.10/Additional Witness**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சேவியர் பிராங்கிளின் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. மரியேந்திரன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது இரணியல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். அங்கு பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர்சிங் மற்றும் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் ஆகியோரின் கையொப்பம் ஆவணங்களை பரிசீலனை செய்யும் பொழுது எனக்கு நன்கு தெரியும் என்பதால் நான் தற்பொழுது ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 29.09.2012–ம் தேதி 22.00 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர்சிங் இருக்கும் பொழுது M.D.பிலிப்போஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 698/2012 சட்டப்பிரிவுகள் 304(A) இ.த.ச, r/w.187 MV Act சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **புகார்மனு அ.சா.ஆ.3 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் என்பவரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

4. இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அவர் சம்பவயிடம் 29.09.2012ம் தேதி 22.30 மணிக்கு சென்று சாட்சிகள் சதாசிவன் மற்றும் பாலஸ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. இவ்வழக்கில் இறந்து போன ஜெயராஜன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்து பின்னர் சடலக்கூறாய்வுக்கு அனுப்பி பிரேதத்தை உறவினரிடம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்துள்ளார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 குறியீடு செய்யப்படுகிறது.**

6. பின்னர் சாட்சிகள் 1 முதல் 12 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தார்சிங் என்பவரை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துள்ளார்.

7. அதன்பிறகு 09.10.2012–ம் தேதி காலை 09.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர் ராஜேஷ் என்பவரை கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் கோபிநாதன் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தார். மேலும் சாட்சிகள் கோபிநாதன் மற்றும் சுரேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துள்ளார்.

8. அதன்பிறகு 09.10.2012–ம் தேதியன்று சாட்சிகள் ஸ்ரீனிவாசன், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் ரமேஷ், விபத்துக்குள்ளான வாகனத்தை புகைப்படம் எடுத்து ஜோசப் அர்சுனன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துள்ளார்.

9. மேலும் அன்றைய தினமே விபத்துக்குள்ளாகிய வாகனமான TN75A3642 Hero Honda Splender மற்றும் TN75J6447 Mahendra Van ஆகியவற்றை வாகன ஆய்வுக்கு அனுப்பி ஆய்வறிக்கை பெற்று சாட்சி விஷ்வமோனமுகமது மற்றும் முருகன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. மேலும் சடலக் கூறாய்வு செய்த மருத்துவர்களிடம் சடலக் கூறாய்வு அறிக்கை பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **அந்த சடலக் கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. அவரது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 304 A இ.த.ச. r/w.187 MV Act சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.